**செய்தி வெளியீடு எண்: 614** **நாள்:20.09.2019**

## செய்தி வெளியீடு

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் **19.9.2019** அன்று தலைமைச் செயலகத்தில், தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரியத்தின் நிதியிலிருந்து கட்டுமானத் தொழிலாளர்களின் பாதுகாப்பினை உறுதி செய்யும் வகையில் **25,000** கட்டுமானத் தொழிலாளர்களுக்கு **5** கோடியே **44** லட்சத்து **44** ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டிலான பாதுகாப்பு உபகரணங்கள் கொண்ட பெட்டகத்தை வழங்கிடும் அடையாளமாக, 7 கட்டுமானத் தொழிலாளர்களுக்கு பாதுகாப்பு உபகரணங்கள் கொண்ட பெட்டகத்தை வழங்கி, துவக்கி வைத்தார்கள்.

கட்டடம் மற்றும் இதர கட்டுமான பணியிடங்களில் பணிபுரியும் தொழிலாளர்களின் பாதுகாப்பினை உறுதி செய்யும் வகையில் முதற்கட்டமாக, **25,000** கட்டுமான தொழிலாளர்களுக்கு பாதுகாப்பு உபகரணங்கள் கொண்ட பெட்டகம் வழங்கப்படும் என்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் **3.7.2018** அன்று சட்டப்பேரவை விதி எண் **110**–ன் கீழ் அறிவித்தார்கள்.

அதன்படி, தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரியத்தின் நிதியிலிருந்து **5** கோடியே **44** லட்சத்து **44** ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் பாதுகாப்பு காலணிகள், பாதுகாப்பு தலைகவசம், பளிச்சிடும் மேலங்கி, கையுறைகள் மற்றும் பாதுகாப்பு கண்ணாடி அடங்கிய பாதுகாப்பு உபகரணங்கள் கொண்ட பெட்டகத்தை **25,000** கட்டுமானத் தொழிலாளர்களுக்கு வழங்கிடும் அடையாளமாக, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் 7 கட்டுமானத் தொழிலாளர்களுக்கு அப்பெட்டகத்தை வழங்கி துவக்கி வைத்தார்கள். இப்பாதுகாப்பு உபகரணங்கள் கொண்ட ஒரு பெட்டகத்தின் மதிப்பு **2,177** ரூபாய் ஆகும்.

இந்த நிகழ்ச்சியில், மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் டாக்டர் நிலோபர் கபில், தலைமைச் செயலாளர் திரு. க. சண்முகம், இ.ஆ.ப., தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை முதன்மைச் செயலாளர் (முழு கூடுதல் பொறுப்பு) திரு.தீரஜ் குமார் இ.ஆ.ப., தொழிலாளர் ஆணையர் திரு.ஆர்.நந்தகோபால், இ.ஆ.ப., தொழிலக பாதுகாப்பு மற்றும் சுகாதார இயக்குநர் திரு.கா.மனோகரன், தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரிய செயலாளர் திரு.டி.குமரன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**